(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 90.]**

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2025 ஒக்தோபர் 10, வெள்ளிக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ (டாக்டர்) ஜகத் விக்கிரமரத்ன,** சபாநாயகர்

**கௌரவ (டாக்டர்) ரிஸ்வி சாலி**, பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ (திருமதி) ஹேமாலி வீரசேகர**, குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ கலாநிதி ஹரினி அமரசூரிய,** பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்

**கௌரவ (பேராசிரியர்) கிரிஷாந்த அபேசேன,** விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சர்

**கௌரவ அனுர கருணாதிலக்க,** துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர்

**கௌரவ சுனில் குமார கமகே,** இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்

**கௌரவ ராமலிங்கம் சந்திரசேகர்,** கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) நலிந்த ஜயதிஸ்ஸ,** சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

**கௌரவ (கலாநிதி) அனில் ஜயந்த,** தொழில் அமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி ஹர்ஷன நானாயக்கார,** நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) தம்மிக பட்டபெந்தி,** சுற்றாடல் அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) உபாலி பன்னிலகே,** கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) சுசில் ரணசிங்ஹ,** வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்

**கௌரவ பிமல் ரத்நாயக்க,** போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

**கௌரவ ஆனந்த விஜேபால,** பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ கே.வி. சமந்த வித்யாரத்ன,** பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) ஹினிதும சுனில் செனெவி,** புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ சஜித் பிரேமதாச,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ சதுரங்க அபேசிங்ஹ,** கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) (செல்வி) கௌஷல்யா ஆரியரத்ன,** வெகுசன ஊடக பிரதி அமைச்சர்

**கௌரவ அர்கம் இல்யாஸ்,** வலுசக்தி பிரதி அமைச்சர்

**கௌரவ நாமல் கருணாரத்ன,** கமத்தொழில் மற்றும் கால்நடை வளங்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ ரத்ன கமகே,** கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) பிரசன்ன குணசேன,** போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர்

**கௌரவ நிசாந்த ஜயவீர,** பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ,** தொழில் பிரதி அமைச்சர்

**கௌரவ மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) அருண ஜயசேகர,** பாதுகாப்பு பிரதி அமைச்சர்

**கௌரவ முனீர் முலாபர்,** சமய மற்றும் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ (பேராசிரியர்) ருவன் ரணசிங்க,** சுற்றுலா பிரதி அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி சுனில் வடகல,** பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) ஹங்சக விஜேமுணி,** சுகாதார பிரதி அமைச்சர்

**கௌரவ உபாலி சமரசிங்ஹ,** கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ ரீ. பீ. சரத்,** வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் பிரதி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) மதுர செனெவிரத்ன,** கல்வி, உயர் கல்வி பிரதி அமைச்சர்

**கௌரவ நலின் ஹேவகே,** தொழிற் கல்வி பிரதி அமைச்சர்

---

**கௌரவ அஜித் அகலகட**

**கௌரவ அமிர்தநாதன் அடைக்கலநாதன்**

**கௌரவ அபூபக்கர் ஆதம்பாவா**

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ சட்டத்தரணி யூ.பி. அபேவிக்ரம**

**கௌரவ (பேராசிரியர்) எல்.எம். அபேவிக்ரம**

**கௌரவ (டாக்டர்) நிஹால் அபேசிங்ஹ**

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல**

**கௌரவ எம்.கே. எம். அஸ்லம்**

**கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி**

**கௌரவ (டாக்டர்) நஜீத் இந்திக்க**

**கௌரவ கே.இளங்குமரன்**

**கௌரவ எம்.எஸ். உதுமாலெப்பை**

**கௌரவ கயந்த கருணாதிலக்க**

**கௌரவ ரவி கருணாநாயக்க**

**கௌரவ (செல்வி) கிருஷ்ணன் கலைச்செல்வி**

கௌரவ சனாதிபதி சட்டத்தரணி எம். நிசாம் காரியப்பர்

கௌரவ உபுல் கித்சிறி

கௌரவ கதிரவேலு சண்முகம் குகதாசன்

கௌரவ சமிந்த லலித் குமார

கௌரவ சட்டத்தரணி சரத் குமார

கௌரவ (திருமதி) சட்டத்தரணி நிலந்தி கொட்டஹச்சி

கௌரவ கவீந்திரன் கோடீஸ்வரன்

கௌரவ (திருமதி) எம்.ஏ.சீ.எஸ். சத்துரி கங்கானி

கௌரவ மனோ கணேசன்

கௌரவ சதுர கலப்பத்தி

கௌரவ (டாக்டர்) ஜகத் குணவர்தன

கௌரவ (திருமதி) சமன்மலீ குணசிங்ஹ

கௌரவ அசோக குணசேன

கௌரவ டி.வீ. சானக

கௌரவ சட்டத்தரணி அநுராத ஜயரத்ன

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன

கௌரவ திலித் ஜயவீர

கௌரவ (திருமதி) சட்டத்தரணி துஷாரி ஜயசிங்ஹ

கௌரவ ரீ.கே. ஜயசுந்தர

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர

கௌரவ (திருமதி) சட்டத்தரணி அனுஸ்கா திலகரத்ன

கௌரவ ஜீவன் தொண்டமான்

கௌரவ சாமர சம்பத் தசநாயக

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ தர்மப்பிரிய திசாநாயக்க

கௌரவ சட்டத்தரணி சுசந்த தொடாவத்த

கௌரவ நந்தன பத்மகுமார

கௌரவ நிமல் பலிஹேன

கௌரவ நிஷாந்த பெரேரா

கௌரவ அஜித் பி. பெரேரா

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ ஜீ.ஜீ. பொன்னம்பலம்

கௌரவ ஸ்டெபனி பிரனாந்து

கௌரவ கந்தசாமி பிரபு

கௌரவ லால் பிரேமநாத்

கௌரவ ரோஹண பண்டார

கௌரவ பத்மசிரி பண்டார

கௌரவ சுதத் பலகல்ல

கௌரவ (டாக்டர்) எஸ். ஸ்ரீ பவானந்தராஜா

கௌரவ ஈ.எம். பஸ்நாயக

கௌரவ லெப்டினன் கமாண்டர் (ஓய்வுபெற்ற) பிரகீத் மதுரங்க

கௌரவ ஜகத் மனுவர்ண

கௌரவ கே.காதர் மஸ்தான்

கௌரவ இம்ரான் மகரூப்

கௌரவ சானக மாதுகொட

கௌரவ ருவன் மாபலகம

கௌரவ (கலாநிதி) நந்தன மில்லகல

கௌரவ சனாதிபதி சட்டத்தரணி பைஸர் முஸ்தபா

கௌரவ இஸ்மாயில் முத்து மொஹம்மட்

கௌரவ தனுஷ்க ரங்கனாத்

கௌரவ சஞ்ஜீவ ரணசிங்ஹ

கௌரவ ஆர்.எம். சமந்த ரனசிங்ஹ

கௌரவ சுனில் ரத்னசிரி

கௌரவ ஆர்.எம். காமிணி ரத்நாயக்க

கௌரவ அசோக சபுமல் ரன்வல

கௌரவ துரைராசா ரவிகரன்

கௌரவ மனோஜ் ராஜபக்ஷ

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்

கௌரவ (திருமதி) சட்டத்தரணி ஹசாரா லியனகே

கௌரவ நயன வாசலதிலக

கௌரவ எம்.எஸ் அப்துல் வாசித்

கௌரவ கஞ்சன வெலிப்பிட்டிய

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன

கௌரவ ஆர்.ஜீ. விஜேரத்ன

கௌரவ சட்டத்தரணி பிரியந்த விஜேரத்ன

கௌரவ தர்மப்ரிய விஜேசிங்ஹ

கௌரவ சமிந்த விஜேசிறி

கௌரவ அசித நிரோஷண எகொட வித்தான

கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்

கௌரவ பஸ்மின் சரீப்

கௌரவ திலிண சமரகோன்

கௌரவ (டாக்டர்) நிஷாந்த சமரவீர

**கௌரவ (டாக்டர்) இளையதம்பி சிறிநாத்**

**கௌரவ ஷாந்த பத்ம குமார சுபசிங்ஹ**

**கௌரவ தேவானந்த சுரவீர**

**கௌரவ சந்தன சூரியஆரச்சி**

**கௌரவ மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) ஜீ.டி.சூரியபண்டார**

**கௌரவ கிட்ணன் செல்வராஜ்**

**கௌரவ சட்டத்தரணி அர்ஜுன சுஜீவ சேனசிங்ஹ**

**கௌரவ (டாக்டர்) ஜனக சேனாரத்ன**

**கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்**

**கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்**

**கௌரவ சந்திம ஹெட்டிஆரச்சி**

**கௌரவ சம்பிக ஹெட்டிஆரச்சி**

**கௌரவ (செல்வி) சட்டத்தரணி லக்மாலி ஹேமசந்திர**

திரு. சமிந்த குலரத்ன, பதிற் பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. ஹன்ஸ அபேரத்ன, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

1. ***சபாநாயகரின் அறிவித்தல்கள்:*** சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல் விடுத்தார்:—

"கௌரவ உறுப்பினர்களே,

2025 ஒக்டோபர் 07 அன்று பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேகர அவர்களால் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 29(1) இன் பிரகாரம் எழுப்பப்பட்ட சிறப்புரிமை பற்றிய விடயம் முழுப் பாராளுமன்றத்தினதும் சிறப்புரிமைகள் தொடர்பானதாக இருப்பதால் அது பற்றிய எனது தீர்ப்பை நான் வழங்க விரும்புகின்றேன். 2024 ஒக்டோபர் 24 அன்று இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதிப் பதவிக்காக ஒரு விண்ணப்பதாரியை பெயர் குறித்து நியமிக்கும் செயன்முறையின் போது பாராளுமன்றச் சபை முதல்வர், அரசியலமைப்பு பேரவையைத் தவறாக வழிநடாத்தி பாராளுமன்றச் (தத்துவங்களும் சிறப்புரிமைகளும்) சட்டத்தின் அட்டவணை 'அ' இன் 4 ஆம் பிரிவின் கீழ் ஒரு சிறப்புரிமையை மீறியுள்ளார் என்று கௌரவ உறுப்பினர் குற்றஞ்சார்த்துகிறார். ஆகவே இந்த விடயத்தை விசாரணைக்காக பாராளுமன்றச் சிறப்புரிமைகள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்துமாறு குறித்த உறுப்பினர் வேண்டியுள்ளார்.

குறித்த விடயத்தைக் கவனமாகப் பரிசீலனை செய்த பின்னர் நான் இப்போது எனது தீர்ப்பை வழங்க விழைகின்றேன்.

**<u>அரசியலமைப்புப் பேரவையின் தன்மை</u>**

பாராளுமன்றச் (தத்துவங்களும் சிறப்புரிமைகளும்) சட்டத்தின் ஏற்பாடுகளைப் பிரயோகிப்பதற்காக, அரசியலமைப்புப் பேரவை பாராளுமன்றத்தின் ஒரு குழுவாகுமா என்கின்ற விடயத்தை முதலில் தீர்மானிக்க வேண்டியுள்ளது.

அரசியலமைப்பின் 41அ உறுப்புரையின் கீழ், அரசியலமைப்புப் பேரவை ஒரு தனித்துவமான மற்றும் சுயாதீனமான அரசியலமைப்புக் குழுவாக நிறுவப்பட்டுள்ளது.

இது பிரதம அமைச்சர், சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர், சனாதிபதியால் பெயர் குறித்து நியமிக்கப்படும் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் பிரதம அமைச்சர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டு சனாதிபதியால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களாக அல்லது பதவிவழி அல்லது சிவில் சமூக உறுப்பினர்களாக இருக்கும் உறுப்பினர்கள் உள்ளிட்ட பல உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

எனவே, இது பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின் கீழ் நிறுவப்பட்ட ஒரு பாராளுமன்றக் குழு அல்ல. அரசியலமைப்புப் பேரவை அரசியலமைப்பின் கீழ் தொழிற்படுவதுடன் அது பாராளுமன்றத்தின் அதிகாரத்தின் கீழோ அல்லது அதன் நிலையியற் கட்டளைகளின் கீழோ தொழிற்படுவதில்லை. எனவே, அரசியலமைப்புப் பேரவையின் எந்த நடவடிக்கைகளையும் அல்லது தீர்மானங்களையும் பாராளுமன்றச் (தத்துவங்கள் மற்றும் சிறப்புரிமைகள்) சட்டத்தின் அர்த்தத்திற்குள் பாராளுமன்றத்தின் அல்லது பாராளுமன்றக் குழுவின் நடவடிக்கைகளாகக் கருத முடியாது.

**<u>பாராளுமன்றச் (தத்துவங்கள் மற்றும் சிறப்புரிமைகள்) சட்டத்திற்கு அட்டவணை 'அ' இன் பிரிவு 4 இன் ஏற்புடைய தன்மை</u>**

பாராளுமன்றச் (தத்துவங்கள் மற்றும் சிறப்புரிமைகள்) சட்டத்தின் அட்டவணை 'அ' இன் பிரிவு 4, பாராளுமன்றத்தை அல்லது பாராளுமன்றக் குழுவைத் தவறாக வழிநடத்துவது பற்றிய குற்றங்களைக் குறிப்பிடுகிறது . நான் ஏற்கனவே கூறியது போல், அரசியலமைப்புப் பேரவை ஒரு பாராளுமன்றக் குழு அல்ல என்பதால், மேற்கூறிய ஏற்பாடு அரசியலமைப்புச் சபையின் செயல்கள் அல்லது கலந்தாராய்வுகளுக்குப் பொருந்தாது.

அதற்கமைவாக, அரசியலமைப்புப் பேரவையின் முன்னிலையில் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் பிழையான அல்லது தவறாக வழிநடத்தும் கூற்று ஒன்றை வெளியிட்டார் எனக் குற்றம் சாட்டப்படுகின்றபோதிலும், அத்தகைய நடத்தை, குறிப்பிடப்பட்ட சட்டத்தின் அட்டவணை 'அ' இன் பிரிவு 4 இனால் கருதப்படுகின்றவாறு பாராளுமன்றச் சிறப்புரிமை தொடர்பான மீறுகை ஒன்றின் வரையறையினுள் வராது.

**<u>அரசியலமைப்புப் பேரவைத் தீர்மானங்களின் அறுதி நிலை</u>**

மேலும், அரசியலமைப்புப் பேரவையின் தீர்மானங்கள் இறுதியானதும் முடிவானதுமாகும் எனவும் அடிப்படை உரிமைகள் தொடர்பான மீறுகை ஒன்றைச் சாட்டியுரைத்து அரசியலமைப்பின் உறுப்புரை 126 இன் கீழ் உயர் நீதிமன்றத்திற்கு மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பம் ஒன்றின் மூலமாகவே தவிர, ஏதேனும் நீதிமன்றத்தினாலோ அல்லது நியாயாதிக்க சபையினாலோ அவற்றினைக் கேள்விக்குட்படுத்தலாகாது எனவும் அரசியலமைப்பின் உறுப்புரை 41 'ஒ' தெளிவான ஏற்பாட்டினை வழங்குகின்றது.

குறிப்பிடப்பட்ட நியமனம் தொடர்பாக அரசியலமைப்புப் பேரவையின் உறுப்பினர்களை பிரதிவாதிகளாகப் பெயர்குறிப்பிட்டு உயர் நீதிமன்றத்தின் முன்னிலையில் மூன்று அடிப்படை உரிமை மனுக்கள் உண்மையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என எனக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த விண்ணப்பங்கள் அதன் பின்னர் மனுதாரர்களால் மேலும் தொடரப்படாது வாபஸ் பெறப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசியலமைப்புப் பேரவையின் தீர்மானத்தைச் சவாலுக்குட்படுத்துவதற்கான முறையான அரசியலமைப்புப் பொறிமுறை உயர்நீதிமன்றத்திடம் காணப்படுகிறதேயன்றிப் பாராளுமன்ற மன்றினுள் அல்ல என்பதை இது உறுதிப்படுத்துகிறது.

**தீர்ப்பு**

மேற்கூறியவற்றின்அடிப்படையில், நான் பின்வரும் பரிசீலிக்கப்பட்ட அபிப்பிராயத்தினைக் கொண்டுள்ளேன்:

1. அரசியலமைப்புப் பேரவை என்பது பாராளுமன்றத்தின் ஒரு குழுவல்ல, மாறாக அரசியலமைப்பின் 41எனும் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட ஒரு தனித்துவமான அமைப்பாகும்;
2. எனவே, பாராளுமன்றச் (தத்துவங்கள் மற்றும் சிறப்புரிமைகள்) சட்டத்தின் அட்டவணை 'அ' இன் பிரிவு 4 இன் ஏற்பாடுகள் அதன் நடவடிக்கைமுறைகளுக்குப் பொருந்தாது;
3. கௌரவ உறுப்பினரால் சார்த்தப்பட்ட குற்றச்சாட்டு, பாராளுமன்றச் சிறப்புரிமை மீறல் தொடர்பான எந்த விடயத்தையும் வெளிப்படுத்தவில்லை;
4. அரசியலமைப்புப் பேரவையின் தீர்மானங்கள் தொடர்பான எந்தவொரு மனக்குறையும் அல்லது சவாலும், அரசியலமைப்பின் 126 ஆம் உறுப்புரையின் கீழ் கிடைக்கும் அரசியலமைப்புப் பரிகாரத்தின் மூலம் மாத்திரமே முன்னெடுக்கப்பட வேண்டும்.

இதன் பிரகாரம், இந்த விடயத்தில் பாராளுமன்றச் சிறப்புரிமை மீறல் எதுவும் எழவில்லை என நான் தீர்ப்பளிக்கிறேன். ஆகவே, கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேகர, பாராளுமன்ற உறுப்பினர், அவர்களால் எழுப்பப்பட்ட விடயம் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படமாட்டாது."

**2. பத்திரங்கள் சமர்ப்பித்தல்:** (1) சபாநாயகர், இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் 2024 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் முதலாவது தொகுதியின் X, XI, XII, XIII, XIV மற்றும் XV ஆம் பகுதிகளையும், நான்காவது தொகுதியின் V ஆம் பகுதியையும் மற்றும் ஆறாவது தொகுதியின் I, II, III மற்றும் IV ஆம் பகுதியையும் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனவும் அச்சிடப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

(2) சபாநாயகர், இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கணக்காய்வு அறிக்கையின் பத்தாவது தொகுதியினது—

(i) குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் இணையவழி ஊடாக வீசா வழங்கும் முறைமை தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கை;

(ii) கடமையை விட்டுச் சென்ற அரச மருத்துவ உத்தியோகத்தர்களிடமிருந்து அரசிற்கு அறவிட வேண்டிய நிலுவை தொகை மற்றும் வெளிநாட்டு பயிற்சியை பெற்ற நிபுணத்துவ மருத்துவ உத்தியோகத்தர்களை இணைப்பது தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கை; மற்றும்

(iii) 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் மருந்து தேவைப்பாடு, பெறுகைகள், வழங்கல், பகிர்ந்தளித்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல் தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கை (இரண்டாம் பகுதி)

ஆகியவற்றைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கைகள் ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனவும் அச்சிடப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

(3) சபாநாயகர், இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் —

(i) 2020 ஆம் நிதியாண்டுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் இரண்டாவது தொகுதியின் LXIII ஆம் பகுதியையும்;

(ii) 2022 ஆம் நிதியாண்டுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் இரண்டாவது தொகுதியின் LXVI ஆம் பகுதியையும்;

(iii) 2023 ஆம் நிதியாண்டுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் இரண்டாவது தொகுதியின் XLVIII ஆம் பகுதியையும்; மற்றும்

(iv) 2024 ஆம் நிதியாண்டுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் இரண்டாவது தொகுதியின் VIII, XII, XIII, XIV மற்றும் XV ஆம் பகுதிகளையும், மூன்றாவது தொகுதியின் X, XI, XII மற்றும் XIII ஆம் பகுதிகளையும் மற்றும் ஒன்பதாவது தொகுதியின் VI மற்றும் VII ஆம் பகுதிகளையும் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கைகள் ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனவும் அச்சிடப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

(4) சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2022 ஆம் ஆண்டுக்கான இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை சுகாதாரம், வெகுசன ஊடகம் மற்றும் மகளிர் வலுவூட்டல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர், 2023 ஆம் ஆண்டுக்கான தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(6) சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2024 ஆம் ஆண்டுக்கான வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை சுற்றாடல், கமத்தொழில் மற்றும் வளங்களின் நிலைத்தன்மை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**3. குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல்**: தொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் தவிசாளர் கௌரவ (கலாநிதி) அனில் ஜயந்த சார்பாக அக்குழுவின் உறுப்பினர் கௌரவ ஆர்.எம். காமிணி ரத்நாயக்க அக்குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட —

(i) 2023 ஆம் ஆண்டுக்கான மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை;

(ii) 2023 ஆம் ஆண்டுக்கான தொழில் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை;

(iii) 2022 ஆம் ஆண்டுக்கான தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை;

(iv) 2022 ஆம் ஆண்டுக்கான ஊழியர் சேமலாப நிதியத்தின் ஆண்டறிக்கை; மற்றும்

(v) 2023 ஆம் ஆண்டுக்கான சிரம வாசனா நிதியத்தின் ஆண்டறிக்கை

தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**4. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

(1) (i) ரத்கம, ரணபனாதெனிய, ரன்சிரி உயன எனும் முகவரியில் வதியும் திரு. டி.எச். திலக் தேசப்பிரியவினது 2025.06.16 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) பிட்டிவெல்ல, மீன்பிடி இல்லம், ஒரொப்பு வத்த, இல. 13 இல் வதியும் திரு. நிபுல் வடுகேயினது 2025.06.15 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(iii) தல்பே, கந்தெவத்த, ஹீனடிகல தெற்கு எனும் முகவரியில் வதியும் திரு. யூ.கே. விஜேசிரியினது 2025.06.08 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ ரத்ன கமகே சமர்ப்பித்தார்.

(2) வாத்துவ, தெற்கு தல்பிட்டிய, தலதா வத்த ஒழுங்கை, இல. 19/3 ஈ யில் வதியும் திருமதி சந்திரிகா த சில்வாவினது 2025.06.09 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ அஜித் பி. பெரேரா சமர்ப்பித்தார்.

(3) தொடம்கஸ்லந்த, லிஹினிவெஹெர ஜனபதய எனும் முகவரியில் வதியும் திரு. பி.ஏ.லலித் பிரான்சிஸினது 2025.06.30 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ எம்.கே.எம். அஸ்லம் சமர்ப்பித்தார்.

(4) (i) வாத்துவ, பொத்துபிட்டிய வடக்கு, சுற்றுவட்ட வீதி, இல. 15 இல் வதியும் திரு. ஜே.எச். காமினி கீர்த்திரத்னவினது 2025.06.16 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(ii) கொழும்பு 10, மருதானை, பொலிஸ் விடுதி, இல. 12 எச் இல் வதியும் திரு. நதீப் காவிந்த சில்வாவினது 2025.06.16 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ சட்டத்தரணி (திருமதி) நிலந்தி கொட்டஹச்சி சமர்ப்பித்தார்.

(5) உடதலவின்ன, கலதெனிய மடிகே, இல. 13 இல் வதியும் திரு. ஜே. ஜமால்டீனினது 2025.06.06 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ ஈ.எம். பஸ்நாயக்க சமர்ப்பித்தார்.

(6) (i) வலல்லாவிட்ட, மகுருமஸ்வில, பாடசாலை மாவத்தையில் வதியும் திருமதி ஏ.எம். பேபி நோனாவினது 2025.06.13 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) பதுரலிய, ஹெடிகல்ல ஜனபதய எனும் முகவரியில் வதியும் திரு. பீ.எல். அபயபாலவினது 2025.05.19 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(iii) பெலவத்த, கல்லென முல்ல, இல. 46 இல் வதியும் திரு. கே.ரீ. பியசேனவினது 2025.04.07 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ தனுஷ்க ரங்கனாத் சமர்ப்பித்தார்.

(7) மாவனல்ல, தெஹிமடுவ, அம்புலுகல வீதி, இல. சீ/174 இல் வதியும் திரு. கே. ஜயந்த குமாரவினது 2025.06.15 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ கஞ்சன வெலிபிட்டிய சமர்ப்பித்தார்.

மேற்படி மனுக்கள் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30(10) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**5. பாராளுமன்ற அலுவல்கள்:** பாராளுமன்றச் சபை முதல்வர் சார்பாக சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்:— பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் 1 ஆம், 2 ஆம், 3 ஆம், 4 ஆம், 5 ஆம் மற்றும் 6 ஆம் இலக்க பிரேரணைகள் மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில், பாராளுமன்ற நிலையியற் கட்டளை 24(2) இன் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப்பெறுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**6. பாராளுமன்ற அமர்வு:** பாராளுமன்றச் சபை முதல்வர் சார்பாக சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்:— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் மற்றும் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 5.30 மணி வரையும் இருக்குமாக. பி.ப. 3.30 மணிக்கு பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8(5) தொழிற்படுமாக. பி.ப. 5.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை ஒத்திவைப்பாராக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**7. சிறப்புரிமை:** பாராளுமன்றச் சபை முதல்வர் சார்பாக சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— தனது சிறப்புரிமை மீறப்பட்டுள்ளதாக, பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ நலின் ஹேவகே அவர்கள் 2025 ஜூலை 09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய விடயங்கள், 118 ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுமாக

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(மு.ப. 11.12 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

**8. ருவன்புர அதிவேக நெடுஞ்சாலையின் நிர்மாணப் பணிகளை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லல்:** கௌரவ சாமர சம்பத் தசனாயக அனுவதிக்க, கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி பின்வருமாறு பிரேரித்தார்,— ருவன்புர அதிவேக நெடுஞ்சாலையை நிர்மாணிப்பதன் நன்மைகள் இரத்தினபுரி மாவட்டத்திற்கு மாத்திரமன்றி பதுளை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களின் மக்களுக்கும் கிடைக்கப்படுவதால் நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில்கூட அதிகமான நன்மைகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய இக்கருத்திட்டத்தினை கட்டம் கட்டமாகவேனும் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது. (பா.7/2024)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**9. பிட்டிகல, உடுகம, நெலுவை மற்றும் தெனியாய ஆகிய நகரங்கள் அமைந்துள்ள சூழல் கட்டமைப்பை சுற்றுலா வலயமாக பிரகடனப்படுத்தல்:** கௌரவ லால் பிரேமநாத் அனுவதிக்க, கௌரவ ரீ.கே. ஜயசுந்தர பின்வருமாறு பிரேரித்தார்,— இலங்கை ஒரு புதிய மறுமலர்ச்சியை நோக்கி நகர்ந்துள்ள இச்சந்தர்ப்பத்தில், நாட்டின் சுற்றுலாத்துறை உள்நாட்டு வருமானத்தை அதிகரிப்பதற்கு ஏதுவாக உள்ளதாலும், இலங்கையின் தாழ்நில மழைக்காடுகளில் உலக மரபுரிமையாக விளங்கும் சிங்கராஜ வனமும், விசேட விலங்குகள் மற்றும் தாவர இனங்கள் செறிந்து காணப்படும் கன்னெலிய காடு மற்றும் ஹினிதும மலையை உள்ளடக்கிய மலைத்தொடரின் (ஹேகொக்) உயிரியல் அமைப்புமுறை வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் விசேட கவனத்தை ஈர்த்துள்ள

சூழல் தொகுதியாக உள்ளதாலும், இச் சூழல் அமைப்பு முறையைக் கொண்ட பிட்டிகல, உடுகம, நெலுவை மற்றும் தெனியாய ஆகிய நகரங்கள் அமைந்துள்ள சூழல் தொகுதியை சுற்றுலா வலயமாக பிரகடனப்படுத்தி அதனை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது. (பா.40/2025)

(பி.ப. 1.00 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**10. பாடசாலைக் கலைத்திட்டத்தில் சட்டம் மற்றும் ஒழுக்கவியல் விடயதானங்களை உள்ளடக்குதல்:** கௌரவ சட்டத்தரணி பிரியந்த விஜேரத்ன அனுவதிக்க, கௌரவ ருவன் மாபலகம பின்வருமாறு பிரேரித்தார்,— இந்நாட்டு மக்கள் எதிர்கொள்கின்ற நாளாந்த பிரச்சினைகளுக்கான முக்கிய காரணமாக அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படைச் சட்டம் பற்றிய அறியாமை அடையாளம் காணப்பட்டுள்ளதாலும், சட்டம் பற்றிய அறியாமை சட்டத்தின்முன் குற்றமற்றவராக இருப்பதற்கான விடயமாக அமையாததாலும், பாடசாலைக் கலைத்திட்டம் சிக்கலாக அமைவதை தவிர்த்து 6 ஆம் தரம் தொடக்கம் 11 ஆம் தரம் வரை பாடசாலை மாணவர்களின் குடியுரிமைக் கல்விப் பாடத்திட்டத்தில் நாட்டின் அடிப்படைச் சட்டம் பற்றிய கற்பித்தலை உள்ளடக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது. (பா.42/2025)

"கௌரவ சானக மாதுகொட தலைமை தாங்குவாராக" என வெகுசன ஊடக பிரதி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 1.46 மணிக்கு கௌரவ சானக மாதுகொட தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**11. தேசிய மருந்துகள் தர உத்தரவாத ஆய்வுகூடத்தை உரிய முறையில் தொழிற்படவைப்பதற்கான வேலைத் திட்டமொன்றைத் தயாரித்தல்:** கௌரவ ஹெக்டர் அப்புஹாமி அனுவதிக்க, கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன பின்வருமாறு பிரேரித்தார்,— தேசிய மருந்துகள் தர உத்தரவாத ஆய்வுகூடம் நிறுவப்பட்டு, இன்றளவில் 35 வருடங்கள் கடந்திருப்பதாலும், தற்போது அந்த ஆய்வுகூடம் முறையாக தொழிற்படாததாலும், இறக்குமதி செய்யப்படும் பெருமளவான மருந்துகள் உரிய தரப் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படாத நிலை காணப்படுகின்றமையால், அந்நிலையை தவிர்ப்பதற்காக உரிய வேலைத் திட்டமொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது. (பா.46/2025)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**12. விவசாயிகளுக்கான காப்புறுதித் திட்டமொன்றை ஆரம்பித்தல்:** கௌரவ கயந்த கருணாதிலக்க அனுவதிக்க, கௌரவ ரோஹண பண்டார பின்வருமாறு பிரேரித்தார்,— நாட்டிலுள்ள விவசாயிகளுக்கான நலன்புரித் திட்டங்களை வகுக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்குரியது என்பதாலும், இந்நாட்டின் மக்கள் தொகையில் பெருமளவானோர் விவசாயிகள் என்பதாலும் விவசாயிகளுக்கான காப்புறுதித் திட்டமொன்று வகுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது. (பா.47/2025)

"கௌரவ சஞ்ஜீவ ரணசிங்ஹ தலைமை தாங்குவாராக" என சுற்றாடல் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 3.06 மணிக்கு கௌரவ சஞ்ஜீவ ரணசிங்ஹ தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**13. ஒத்திவைப்பு (தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் சுயாதீனத் தன்மையை உறுதிப்படுத்தல்)**: "இப் பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக"என சுற்றாடல் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

அவ்வேளை, நேரம் பி.ப. 5.30 மணியாகிவிடவே, தலைமைதாங்கும் உறுப்பினர் இன்றைய தின சபைத் தீர்மானத்திற்கிணங்க பாராளுமன்றத்தை ஒத்திவைத்தார்.

அதன்படி பாராளுமன்றம், 2025 ஒக்தோபர் 21 திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.